# ஆசிரியர் தகுதித் தேர்வு: தமிழ்நாடு அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜுலை 4- அரசு பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், ஜுலை 4 மற்றும் 5ஆம் தேதிகளில் நடைபெறும் சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவில், குறிப்பிட்ட பாடத்தின் ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ள தங்களுக்கு தொடர்பில்லாத கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களிலிருந்து 60 மதிப்பெண்களுக்கு கேள்விகள் கேட்பதால், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் பாடங்களுக்கு கூடுதல் மதிப்பெண்கள் நிர்ணயித்து தேர்வு நடத்தும் வகையில் அறிவிப்பாணையை திருத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரியுள்ளனர்.

இந்த வழக்கு நீதிபதி பி.டி.ஆஷா முன்பு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மைத்ரேயி சந்துரு, தமிழ் பாடத்தில் கல்வித் தகுதியை பெற்றவர்தான் தமிழை பயிற்றுவிக்கிறார்; ஆங்கில பாடத்தில் கல்வித் தகுதியை பெற்றவர்தான் ஆங்கில பாடம் நடத்துகிறார்; ஆனால் இவர்கள் தங்களுக்கு தொடர்பில்லாத கணிதம் மற்றும் அறிவியல் தேர்வு எழுதிய நிரபந்திக்கப்படுகிறார்கள்; இது அவர்களுக்கு பாதாகத்தை ஏற்படுத்துவதாக வாதிட்டார். இந்த வாதத்தை கேட்ட நீதிபதி, மனுதாரர்களின் கோரிக்கை நியாயமானதாக இருந்தாலும், கடைசி நேரத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 6 மாதங்களுக்கு ஒருமுறை தகுதித் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதால், அடுத்த தேர்வில் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலித்து அதற்கு ஏற்றபடி அறிவிப்பாணையை வெளியிட தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# முன்பணம், பிடித்தம் தொகை என பி.எஃப். விதிகளில் மாற்றம்!

சென்னை, ஜுலை 4- வருங்கால வைப்பு நிதியில், ஊழியர்கள் தங்களது விருப்பத்தின் அடிப்படையில், மாதம் ஆயிரத்து 800 ரூபாய்க்கு மேல் செலுத்தும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. பிஃஎப் நிதியில் இருந்து முன் பணமாக 75 சதவீதம் வரை எடுத்துக் கொள்ளலாம் எனவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் ஊழியர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருங்கால வைப்பு நிதியில், கட்டாய பங்களிப்புத் தொகை ஆயிரத்து 800 ரூபாயாகநிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், கூடுதல் தொகையை விருப்பத்தின்பேரில் தொழிலாளர்கள் செலுத்தும் முறை கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி, தொழிலாளர்கள் பெறும் ஊதியத்தில் 12 சதவீதம் என்ற அடிப்படையில், மாதம் ஆயிரத்து 800 ரூபாய் கட்டாய பங்களிப்புத் தொகை இருந்து வருகிறது. தற்போது அதற்கு மேலும் ஒய்வூதிய சேமிப்பை அதிகரிக்க விரும்பும் தொழிலாளர்கள், கூடுதல் தொகையை விருப்ப அடிப்படையில் பி.எஃப் கணக்கில் செலுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், பி.எஃப் கணக்கிலிருந்து முன்பணம் எடுக்கும் விதிகளிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தகுதியான இருப்புத் தொகையில் ஊழியர் மற்றும் நிறுவனம் செலுத்திய பங்களிப்பு தொகைகளில் இருந்து 75 சதவீதம் வரை முன்பணமாக எடுத்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பி.எஃப் உறுப் பினர்கள் தங்களது கணக்கில் உள்ள மொத்த பங்களிப்பில் குறைந்த பட்சம் 25 சதவீதத்தை இருப்பு வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, ஊழியர்களின் விருப்பத்தின் பேரில் ஆயிரத்து 800 ரூபாயை விட அதிகத் தொகை பிடித்தம் செய்ய அனுமதிக்கப்பட்டிருப்பது பெரிய அளவில் பயனளிக்காது என கூறப்படுகிறது.

# பத்திரிகையாளரை அச்சுறுத்திய வைகோவுக்கு கண்டனம்!

## திருப்பூர் மாவட்ட செய்தியாளர்கள் சங்கம் அறிக்கை!

திருப்பூர், ஜுன் 4- செய்தியாளர்களை அச்சுறுத்தும் வகையில் பேசிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தன் தொண்டர்களை தூண்டிவிட்டு செய்தியாளர்களை தாக்க முயன்ற சம்பவத்திற்கு திருப்பூர் மாவட்டச் செய்தியாளர்கள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அச்சங்கம் தெரிவித்திருப்பதாவது:-

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் அருகே 30.06.2026 அன்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்ட நிகழ்ச்சியில் செய்தியாளர்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது வைகோ பத்திரிகையாளரை மிரட்டும் வகையில் பேசியுள்ளார். மேலும், நீங்க திட்டமிட்டு குழப்பம் செய்வதற்காக இங்கே வந்திருக்கீங்க” என்று வைகோ ஒருமையில் பேசத் துவங்கியதும் அங்கு கூடியிருந்த ம.தி.மு.க.வினர் பத்திரிக்கையாளரை நோக்கி ஆவேசமாக முன்னேறியுள்ளனர்.

பொதுவெளியில் பத்திரிக்கையாளரிடம் முறையாக நடந்து கொள்ளாதது மட்டுமல்லாது தன் தொண்டர்கள் மூலம் பத்திரிக்கையாளருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி பாதுகாப்பு இல்லாத சூழலை உருவாக்கியுள்ளது மிகவும் கண்டனத்துக்குரியது. பாதுகாப்பற்ற சூழலில் இருந்த பத்திரிக்கையாளருக்கு சக பத்திரிகையாளர் மற்றும் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் பாதுகாப்பு வழங்கினர்.

வைகோ பத்திரிக்கையாளர்களிடம் இது போன்ற நடந்து கொள்வது இது முதல் முறை அல்ல. கடந்த 09.07.2025 அன்று. விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் நடைபெற்ற ம.தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த பத்திரிகையாளர்களை தகாத வார்த்தையில் திட்டியதுடன், அங்கு கூடியிருந்த ம.தி.மு.க. தொண்டர்களிடம் பத்திரிகையாளர்களிடமிருந்து ஒளிப்பதிவுக் கருவிகளை பறிக்கும்படி மேடையில் இருந்து கொண்டே வெளிப்படையாக உத்தரவிட்டார்.

இது போன்று தொடர்ந்து பத்திரிகையாளர்களை அவமதிப்பு செய்து வரும் ம.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் வைகோவின் செயல் கண்டனத்துக்குரியதாக பார்க்கப்படுகிறது. மக்களுக்கும் அரசுக்கும், அரசியல் கட்சியினருக்கும் பாலமாய் இருக்கும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிப்பதும் மறுப்பதும் அரசியல் கட்சித் தலைவர்களின் உரிமை. அதை விடுத்து கேள்வி எழுப்பும் செய்தியாளர்களை பொது வெளியில் அவமரியாதை செய்வதும் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வதும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

ஆகவே மூத்த அரசியல்வாதியான வைகோ இதுபோன்றதொரு சூழ்நிலைகளை உருவாக்கக் கூடாது. பத்திரிகையாளர்களை அவமதிப்பு செய்த இச்சம்பவத்திற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு திருப்பூர் மாவட்டச் செய்தியாளர்கள் சங்கம் (TDJA) சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

### ஆரணி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர்

# ஆ.சொ. தயாளன் மனைவி திருமதி. லலிதா மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 4–

ஆரணி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் ஆ.சொ.தயாளன் மனைவி திருமதி. லலிதா அவர்கள் இயற்கை எய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

ஆரணி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் ஆ.சொ. தயாளன் அவர்களின் மனைவி திருமதி. லலிதா அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன்.


அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை அ.இராஜாராமன்

### ஜுலை 4 (2020)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

கிளைக் கழகச் செயலாளர், நகரப் பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

குடந்தை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

பேரறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு.க. தலைவரைச் சந்தித்து ஆலோசனை!

## புதுச்சேரி தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!



புதுச்சேரி, ஜூலை 4 – புதுச்சேரி மாநில தி.மு.க. நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நடந்தது.

மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா தலைமை தாங்கினார். அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணை அமைப்பாளர் அ.தைரியநாதன் வரவேற்று பேசினார்.

தட்டாஞ்சாவடி தொகுதி இடைத் தேர்தல் சம்பந்தமாக புதுச்சேரி மாநில நிர்வாகிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து தொகுதியின் தற்போதைய நிலவரம் குறித்தும், தி.மு.க. வெற்றி வாய்ப்பு குறித்தும், வேட்பாளர் தேர்வு தொடர்பாக விளக்கம் அளிப்பது என்றும் கழகத் தலைவர் அறிவிக்கும் வேட்பாளரை முழு வீச்சில் தேர்தல் பணியாற்றி வெற்றி பெற செய்வது என்றும் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வே. கார்த்திகேயன், அ. செந்தில் (எ) ரமேஷ், விக்னேஷ் கண்ணன்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண்.குமரவேல், லோகையன், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், தங்கவேலு, வேலன், தர்மராஜ் இளம்பரிதி, செந்தில்குமார், அமுதாகுமார், நிர்கீஸ், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், வடிவேல், ராஜா, சீத்தாராமன், ராஜாராமன், சக்திவேல், இளஞ்செழிப்பாண்டியன், கலியகார்த்திகேயன், பாண்டு அரிகிருஷ்ணன், நடராஜன், ஆறுமுகம், மணிகண்டன், சத்தியவேலு, சிவக்குமார், முருகதாஸ், சவுரிராஜன், மோகன், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் ஏழை எளிய – நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிப்பு!

# அரிசி விலை கடும் உயர்வு! த.வெ.க. அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சித் தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் கேள்வி!



சென்னை, ஜுலை 4 - தமிழ்நாட்டில் அரிசி விலை கிலோவுக்கு ரூ5 முதல் ரூ10 வரை அதிகரித்துள்ளது. சீரகசம்பா அரிசி கிலோவிற்கு ரூபாய் 96 வரை விற்கப்படுகிறது. இந்த விலை உயர்வு ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தை கடுமையான பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

ஆந்திரா, தெலுங்கானாவில் கடந்த ஆண்டில் கோடை மழை மற்றும் பருவமழை சரி வர பெய்யாததால் தற்போதைய சாகுபடியும் குறைந்து வருகிறது. தமிழகத்திலும் கர்நாடக அரசு தமிழகத்திற்கு தேவையான தண்ணீரை திறந்து விடாததாலும் குருவை சாகுபடியை உறுதி செய்ய இயலவில்லை. இதனால் தமிழகத்திலும் நெல் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அரிசியின் விலை நாளுக்கு நாள் உயர்வதால் ஏழை மற்றும் நடுத்தர மக்களை பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. நெல் உற்பத்தி குறைவு மற்றும் நெல் பற்றாக்குறையால் வரும் காலங்களில் அரிசி விலை மேலும் கடுமையாக உயர வாய்ப்புள்ளது.

மேலும் அரிசி விலை உயர்வுக்கு டீசல் விலை உயர்வும் காரணம். லாரி வாடகை அதிகரித்ததும் முக்கிய காரணமாகும். இதுபோன்ற பல காரணங்களால் அரிசி விலை உயர்வு என்பது ஏழை மற்றும் நடுத்தர மக்களை கடுமையாக பாதிப்படைய செய்துள்ளது.

இவ் விலை உயர்வை உணர்ந்து தமிழக அரசு இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன? இது சம்பந்தமாக துறைசார்ந்த அமைச்சர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளை வைத்து அரிசி விலையை கட்டுப்படுத்த ஆலோசனைக் கூட்டம் நடத்தாதது ஏன்?

மாற்றுக் கட்சி நிர்வாகிகளை தங்கள் கட்சியில் சேர்ப்பதற்கு காட்டும் அக்கறையை ஏழை, எளிய மக்களின் மீது காட்ட வேண்டும். இது போன்ற நிலை களை உன்னிப்பாக கவனித்து விலையேற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன் த.வெ.க. அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

# காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவானது:

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜுலை 4 - வடமேற்கு வங்கக் கடல், அதனை ஒட்டிய வடக்கு ஒடிசா மேற்கு வங்க கடலோரத்தில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவை, நீலகிரி, கன்னியா குமரி மாவட்டங்களில் நாளை ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும்.

இவ்வாறு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ராமர் கோயில் நன்கொடை மோசடி விவகாரம்:

# அயோத்தியில் கட்டுக்கட்டாக பணம், தங்கம், வெள்ளி பறிமுதல்!

## போலீஸ் அதிரடி சோதனையில் சிக்கியது!

அயோத்தி, ஜுலை 4 - ராமர் கோயில் நன்கொடை மோசடி தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாக, அயோத்தியில் காவல்துறையினர் புதிய சோதனைகளை மேற்கொண்டனர்.

இதில் க்யூஆர் குறியீடு கொண்ட நன்கொடைப் பெட்டி, ரொக்கம், தங்கம், வெள்ளி மற்றும் வெளிநாட்டு நாணயம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. அயோத்தி ராமர் கோயில் நன்கொடை மோசடி விவகாரம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உத்தரப் பிரதேச அரசால் அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணைக் குழு ஜுன் 23 அன்று தனது முதற்கட்ட ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தது. அதைத் தொடர்ந்து ஜுன் 25 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, கோயில் நன்கொடை எண்ணும் பணியில் ஈடுபட்டிருந்த 8 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த சர்ச்சைக்கு தார்மீகப் பொறுப்பேற்று சமீபத்தில் ராஜினாமா செய்வதாக அறிவித்திருந்த ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராயின் வாக்குமூலத்தையும் போலீசார் பதிவு செய்தனர்.

மேலும் சிறப்பு விசாரணைக்குழுவினர் நீதிமன்ற அனுமதியைப் பெற்று, மாவட்டச் சிறையில் இருந்த குற்றம் சாட்டப்பட்ட அவினாஷ் சுக்லா என்பவரிடம் இந்த மோசடி தொடர்பாக விசாரணை நடத்தியபோது, இவ்வழக்கில் கூடுதல் தகவல்கள் கிடைத்தன. இதையடுத்து இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பலரது வீடுகளில் அயோத்தி போலீசார் மற்றும் சிறப்பு புலனாய்வு குழுவினர் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

குற்றம் சாட்டப்பட்ட லவ்குஷ் மிஸ்ராவின் வீட்டில், காய்ந்த வைக்கோல் கட்டுகளுக்கு இடையே காவல்துறையினர் தீவிர சோதனையை மேற்கொண்டனர்.

விசாரணைக்காக லவ்குஷின் தந்தை பச்சு லால் மிஸ்ரா காவலில் எடுக்கப்பட்டார். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அவினாஷ் சுக்லாவிடமிருந்து ரூ. 20.39 லட்சம், கருணேஷ் பாண்டேவிடமிருந்து ரூ. 18.07 லட்சம், அனுகல்ப் மிஸ்ராவிடமிருந்து ரூ. 16.82 லட்சம், லவ்குஷ் மிஸ்ராவிடமிருந்து ரூ. 14.25 லட்சம், ராமசங்கர் மிஸ்ராவிடமிருந்து ரூ. 7.32 லட்சம் மற்றும் ‘டின்னு’ என்று அழைக்கப்படும் ராமசங்கர் யாதவிடமிருந்து ரூ. 1 லட்சம் ஆகிய பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், விசாரணையின் போது சுமார் 11 கிராம் தங்கம், சுமார் 375 கிராம் வெள்ளி மற்றும் 1,121 அமெரிக்க டாலர்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அவினாஷ் சுக்லா கடந்த 10 ஆண்டுகளாகத் தங்கியிருந்த அயோத்தியில் உள்ள ஒரு யோகா மையத்திலிருந்து, ராமராஜ்ய கோஷ் என்று பெயரிடப்பட்ட பேடிஎம் க்யூஆர் குறியீடு கொண்ட நன்கொடைப் பெட்டியை காவல் துறையினர் மீட்டனர்.

அந்த மையத்தின் யோகா பயிற்சியாளரான சுந்தர் லால் கூறுகையில், காவல்துறையினர் முதலில் ஜுன் 5 அன்று அந்த வளாகத்தில் சோதனை நடத்தி, சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து, சுக்லா தங்கியிருந்த அறையைச் சோதனையிட்டதாகத் தெரிவித்தார். இதற்கிடையே அயோத்தி ராமர் கோயில் வளாகத்தில் பணியமர்த்தப்பட்டிருந்த சுமார் 400 தனியார் பாதுகாப்புப் பணியாளர்களின் பங்கும் இந்த விசாரணையில் ஆராயப்பட்டு வருகிறது.